பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
01 04 2025 **TUESDAY** 6 45 **AM**
வணக்கம்-மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, மும்பையில் இன்று நடைபெறும் ரிசர்வ் வங்கியின் 90வது ஆண்டு நிறைவு விழாவில் பங்கேற்கிறார்.
- காற்று மாசுபாட்டை குறைப்பதற்கு மின்சார வாகனங்கள் சிறந்த மாற்றாக இருக்கும் என்று மத்திய சாலை போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.
- உலக ஒலி-ஒளி பொழுதுபோக்கு மாநாடு, மே மாதம் 1ஆம் தேதி மும்பையில் நடைபெறவுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.
- ஆதிதிராவிடர் விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கான உணவுப் படியை 5 ஆயிரம் ரூபாயாக உயர்த்த வேண்டும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு. அண்ணாமலை தமிழக அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.
- ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் மும்பை அணி எட்டு விக்கெட் வித்தியாசத்தில் கொல்கத்தா அணியை வென்றது.

>>>>>><<<<<<

குடியரசுத்தலைவர் திருமதி, திரௌபதி முர்மு, இரண்டு நாள் பயணமாக மும்பை சென்றுள்ளார்.

நேற்று மாலை மும்பைக்கு சென்ற அவரை, மகாராஷ்ட்ர மாநில ஆளுநர் திரு. ராதாகிருஷ்ணன், துணை முதலமைச்சர் திரு. ஏக்நாத் ஷிண்டே ஆகியோர் வரவேற்றனர்.

மும்பையில் இன்று நடைபெறும் ரிசர்வ் வங்கியின் 90வது ஆண்டு நிறைவு விழாவில் அவர் பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்.

இந்த நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா, அம்மாநில முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

ரிசர்வ் வங்கியின் ஆளுநர் திரு. சஞ்சய் மல்கோத்ரா அனைவரையும் வரவேற்று உரையாற்றுகிறார்.

>>>>>><<<<<<

காற்று மாசுபாட்டை குறைப்பதற்கு மின்சார வாகனங்கள் சிறந்த மாற்றாக இருக்கும் என்று மத்திய சாலை போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

மஹாராஷ்ட்ர மாநிலம், தானே-யில் மின்சார சைக்கிள் உற்பத்திக்கான ஆய்வகத்தை அவர் நேற்று தொடங்கி வைத்து பேசினார்.

காற்று மாசுபாடு மிகப் பெரிய சவாலாக உள்ள நிலையில் அதனை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்து வருவதாக அவர் கூறினார்.

வரும் 2030ஆம் ஆண்டுக்குள் மின்சார வாகனங்களின் உற்பத்தி இந்தியாவில் அதிக அளவில் இருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

பெட்ரோல் மற்றும் டீசலில் இயங்கும் வாகனங்களின் விலையிலேயே மின்சார வாகனங்களின் விலையும் இருக்கும் என்று திரு. நிதின்கட்கரி கூறினார்.

>>>>>><<<<<<

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கரை இந்தியா வந்துள்ள நெதர்லாந்து வெளியுறவு அமைச்சர் திரு. **Caspar Veldkamp** புதுதில்லியில் சந்தித்து பேசினார்.

இருநாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு, வர்த்தகம், முதலீடு, புத்தாக்கம், வேளாண்மை, மருத்துவம், பாதுகாப்பு மற்றும் மக்களுக்கு இடையேயான கலாச்சார உறவுகள் குறித்து இருவரும் விவாதித்தனர்.

செமி கண்டக்டர், பசுமை ஹைட்ரஜன், கல்வி மற்றும் திறன் மேம்பாடு ஆகிய துறைகளில் புதிய வாய்ப்புகளை கண்டறிவது குறித்து அவர்கள் ஆலோசனை நடத்தினர்.

நெதர்லாந்து நாட்டின் வெளியுறவு அமைச்சர் இந்தியாவிற்கு வந்துள்ளது, இருநாடுகளுக்கு இடையேயான பல்வேறு துறைகளின் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் என்று வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால், தமது சமூகவலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

உலக ஒலி-ஒளி பொழுதுபோக்கு மாநாடு, மும்பையில் மே மாதம் 1ஆம் தேதி நடைபெறவுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், இந்த மாநாடு ஜியோ உலக மாநாட்டு மைய கூடத்தில் நடைபெறுவதாக கூறியுள்ளார்.

இதில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வர்த்தகர்கள் மற்றும் நுகர்வோர் பங்கேற்கவுள்ளனர்.

புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் புதுமைகளை வெளிப்படுத்தும் வகையிலான பல்வேறு ஒலி ஒளி நிகழ்ச்சிகளும் இம்மாநாட்டில் இடம்பெறவுள்ளன.

>>>>>><<<<<<

ஆதிதிராவிடர் விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கான உணவுப் படியை ஆயிரத்து 500-லிருந்து 5 ஆயிரம் ரூபாயாக உயர்த்த வேண்டும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு. அண்ணாமலை தமிழக அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதிகளில் வழங்கப்படும் உணவு, தரமானதாக இல்லை என்றும், அனைத்து மாணவர்களுக்கும் மூன்று வேளையும் சுவையான மற்றும் தரமான உணவு கிடைப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

மாணவர் விடுதிகளை மேம்படுத்தி, சுத்தமான குடிநீர், சுகாதாரமான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் திரு. அண்ணாமலை மாநில அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>><<<<<<

கோடை விடுமுறை தொடங்கியுள்ள நிலையில், நீலகிரி மாவட்டத்திற்கு அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வரக்கூடும் என்பதால், இன்று முதல் இ-பாஸ் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

வார நாட்களில் நாளொன்றுக்கு 6 ஆயிரம் வாகனங்களும், வார இறுதிநாட்களில் 8 ஆயிரம் வாகனங்களும் அனுமதிக்கப்பட வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியபடி, மாவட்ட நிர்வாகம் ஏற்பாடுகளை செய்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சரவணன் 33 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் உள்ள மன்னவனூர் சூழல் சுற்றுலா மையத்தில் பராமரிப்புப் பணிகள் நடைபெறுவதால், இன்று முதல் நான்கு நாட்கள் சுற்றுலா பயணிகள் அங்கு செல்ல தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளதாக வனத்துறை அறிவித்துள்ளது.

இதனையொட்டி, மன்னவனூர் ஏரியில் பரிசல் சவாரி செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ்பைட் - ராஜசேகரபாரதி 34 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

பாஸ்போர்ட் தொடர்பான சந்தேகங்களை களையும் வகையில் சென்னை மண்டல பாஸ்போர்ட் அலுவலர் திரு விஜயகுமாருடன், எமது செய்திப்பிரிவு உதவி இயக்குனர் ஜாய் பங்கேற்ற நேர்முகம், இன்று காலை மணி 8.45-க்கு ஒருங்கிணைந்த அலைவரிசையில் ஒலிபரப்பாகும்.

மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

>>>>>><<<<<<

யுக்ரைனில் அமைதியை ஏற்படுத்தும் வகையில் இருநாடுகளுக்கு இடையே இருதரப்பு உறவுகளை மேம்படுத்த ரஷ்யா – அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக ரஷ்ய வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

மியான்மரில் நிலநடுக்கதால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 2 ஆயிரத்தை தாண்டியுள்ளது.

>>>>>><<<<<<

மத்தியப்பிரதேசத்தில் 19 புனித நகரங்களில் மதுவிலக்கு நடைமுறை இன்று முதல் அமலுக்கு வருவதாக அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

>>>>>><<<<<<

மஹாராஷ்ட்ராவில் 62வது தேசிய கடல்சார் தின கொண்டாட்டங்களை அம்மாநில ஆளுநர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<<

நாமக்கல் மாவட்டம், பரமத்தியில் திருநங்கைகள் தின விழா கொண்டாடப்பட்டது. இதில் நூற்றுக்கு மேற்பட்ட திருநங்கைகள் தங்களது தனித்திறமைகளை வெளிப்படுத்தும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

>>>>>><<<<<<

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 5 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ள தக்காளி விளைச்சல் அதிகரிப்பால் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

>>>>>><<<<<<

உலக பிரசித்தி பெற்ற திருவாரூர் தியாகராஜர் திருக்கோவிலின் ஆழித்தேர் கட்டுமானப் பணிகளை மாவட்ட ஆட்சியர் திரு. மோகனச்சந்திரன் நேரில் ஆய்வு செய்தார்.

>>>>>><<<<<<

சென்னை, திருவெற்றியூர் பகுதியில் மாஞ்சா நூல் பயன்படுத்தி காற்றாடிகளை பறக்கவிட்ட இருவரை காவல்துறையினர் கைது செய்தனர்.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் மும்பை அணி எட்டு விக்கெட் வித்தியாசத்தில் கொல்கத்தா அணியை வென்றது.

மும்பையில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடிய கொல்கத்தா அணி 16 புள்ளி இரண்டு ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 116 ரன் எடுத்தது.

117 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய மும்பை அணி 12 புள்ளி ஐந்து ஓவரில் இரண்டு விக்கெட் இழப்பிற்கு 121 ரன் எடுத்து வெற்றி பெற்றது

**Ryan Rickelton** அதிகபட்சமாக 62 ரன் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் லக்னோ – பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

லக்னோவில் இப்போட்டி இரவு மணி 7 .30 க்கு தொடங்குகிறது.

**>>>>>><<<<<<**

தென்கொரிய சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் மனிக்கா பத்ரா இன்று சீனாவின் **Tianya Qian** –ஐ எதிர்கொள்கிறார்.

**>>>>>><<<<<<**